**செய்தி வெளியீடு எண்: 835** **நாள்: 26.11.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

உலக அளவில் உற்பத்தி சார்ந்த தொழில் முதலீட்டிற்கும், மின்னணு சாதனங்கள் உற்பத்திக்கும் உகந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

ஜனவரி **2006–**ஆம் ஆண்டில் ஸ்ரீபெரும்புதூரில் உற்பத்தியை தொடங்கிய நோக்கியா நிறுவனம், மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து அளித்த ஆதரவினால் உலகத்தின் மிகப்பெரிய கைப்பேசி தயாரிக்கும் நிறுவனமாகவும், கைப்பேசி ஏற்றுமதி மையமாகவும் திகழ்ந்தது. மேலும், நோக்கியா நிறுவனத்திற்கு மட்டுமே உதிரி பாகங்கள் வழங்கும் வழங்குநர் நிறுவனங்கள் (Dedicated Vendor Companies) நோக்கியா டெலிகாம் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் அமைந்தன.

தொழில் சம்பந்தப்பட்ட சில சிக்கல்கள் காரணமாக, நோக்கியா நிறுவனம் தொடர்ந்து செயல்பட முடியாத நிலை ஏற்பட்டது. நோக்கியா டெலிகாம் சிறப்பு பொருளாதார மண்டலத்தை உயிர்ப்பிக்க மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து முயற்சிகள் எடுத்து வந்தது. இதன் விளைவாக, **2019–**ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது, நோக்கியா டெலிகாம் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் **500** கோடி ரூபாய் முதலீட்டில் **5,600** நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், கைபேசி மின்னேற்றிகள் (Mobile Chargers) உற்பத்தி செய்யும் விரிவாக்கத் திட்டத்தினை செயல்படுத்த, பின்லாந்து நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற Salcomp Manufacturing India Pvt. Ltd. நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ்நாடு அரசு கையெழுத்திட்டது.

அதுமட்டுமல்லாது, FIH இந்தியா டெவலப்பர் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (பாக்ஸ்கான் குழுமத்தின் பிரிவு), மின்னணு சாதனங்கள் உற்பத்திக்கான விரிவாக்க திட்டத்திற்காக, இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் **2500** கோடி ரூபாய் முதலீடு செய்யவும், **20,000** நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

தற்போது, Salcomp நிறுவனமானது ஸ்ரீபெரும்புதூரில் மூடப்பட்டுள்ள நோக்கியா நிறுவனத்தின் தொழிற்சாலையை வாங்குவதற்காக, நோக்கியா நிறுவனத்துடன் ஓர் உடன்பாட்டை எட்டியுள்ளது. நோக்கியா நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை

பயன்படுத்தி, Salcomp நிறுவனம், அடுத்த ஆண்டு மார்ச் முதல் மின்னணு சாதனங்கள் உற்பத்தியை தொடங்கும் என்றும், இத்தொழிற்சாலை முழுமையான செயல்பாட்டினை அடையும்போது, ஏற்கனவே பணிபுரிந்து வரும் 7,000 நபர்களுடன் கூடுதலாக 10,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் எனவும், இந்நிறுவனம் அடுத்த 5 ஆண்டுகளில் சுமார் 1,300 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்யும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது, நோக்கியா டெலிகாம் சிறப்பு பொருளாதார மண்டலத்தை உயிர்ப்பிக்க மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்டு வந்த முயற்சிகளுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். மேலும், ஸ்ரீபெரும்புதூர் பகுதியினை உலகின் மிகச்சிறந்த மின்னணு சாதனங்கள் உற்பத்தி மண்டலமாக உருவாக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**